
# மண்

சஞ்சிகை

1990 - 2010

ஜேர்மனி | 17.04.2010



20வது ஆண்டு

# சிறுவர் சிறப்பு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Ayngaran TV GER
Bochumer Str. 16
44623 Bochum
Germany

Mr. K. Kalai
Tel.: 0049 173 2815551

Grill
Pizzeria
Pesto 2

Pesto Grill Pizzeria 2
Molbergstr.31
47249 Duisburg
Germany

Mr. S. Rajeevan
Tel.: 0049 203 7577636

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த மலரை அலங்கரிப்பவர்கள்...

சாருகா சாருஜன்
சுபாங்கி ரவீந்திரன்
வி. ஜெனனி
நிவேதா சண்முகலிங்கம்
ரிஷி சாந்தலிங்கம்
ஜதீசன் சிவபாலன்
வாகீசன் சிவபாலன்
சூமியா முரளிதரன்
பார்கவி செல்வேந்திரன்
ராம்ஜித் ராகவன்
ஆரணி அருள்வடிவேல்
கிலவுஸ்யா சந்திரகுமார்
குணாளன் இராஜேந்திரன்
சாயித்தன் சோதீஸ்வரன்
மயூரணி சண்முகரத்தினம்
கோ. நிருஜா
பிருத்திகா சிவஞானம்
நிர்மலா நகுலேந்திரன்
துாரிகா குணலிங்கம்
பானுரதி புவனேந்திரன்
அஜானா அருள்வடிவேல்
சரண்யா இராஜேந்திரன்
ராம் பரமானந்தன்
சி. சியாமளா
சுபைதா ரவீந்திரன்
நிலானி மணிவண்ணன்
ஜதுகினி கிரிதரன்
சரண் ரவிச்சந்திரன்
ஆரணி வரதராஜா
றிஷிசன் தர்மசீலன்
பவுத்திரா பிரபாகரன்
ஆரபி பத்மநாதன்
விதுசன் கிரிதரன்
நிதுர்சன் சிறிஸ்கந்தராசா
டிலக்சன் தர்மசீலன்
தர்சிகன் தவக்குமார்
வனோஸ் வசீகரன்
பானுஸ்கந்தா.புவனேந்திரன்
லிசானா பிரபாகரன்
இந்துஜா இளங்குமார்
வாசீகன் ஆரணி
ஹெரணி சிவராஜா
அபிராமி.பரமானந்தன்
தர்சனா சோதீஸ்வரன்
விதுசா ஜெகதீசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றி:

இந்த நூலுக்கான அட்டைப்படத்தினைச் சிறப்புற உருவாக்கியதுடன் இந்நூலினைத் தொகுப்பதற்குக் கணனித்தொழில் நுட்பத்தில் எமக்கு உதவிகள் புரிந்த செல்வன் **பானுஸ்கந்தா புவனேந்திரன்** அவர்களுக்கு எம் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

-ஆசிரியர் மண் சஞ்சிகை-

**V.Sivarajah**
Am Windhovel 18A
47249 Duisburg

0203/8073898

v.sivarajah@arcor.de

Mann (Erde) Verein e.V. Duisburg
Stadtsparkasse Duisburg
Kontonummer: 225 000 421
Bankleitzahl: 350 500 00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களோடு ஒரு நிமிடம்!........

அன்புச்சிறார்களே!..மாணவமணிகளே!..இளையோரே!.. பெற்றோர்களே அனைவருக்கும் இனிதான வணக்கம்!...இன்றைய சிறார்களே நாளைய தலைவர்கள் என்பது முதுமொழி. புலம்பெயர் தேசங்களில் நம் சிறார்களுக்கென தாய்மொழி சஞ்சிகை அருகிவரும் வேளையில் உங்கள் மண் சஞ்சிகையானது கடந்த இருபது ஆண்டுகாலம் புலம்பெயர் தமிழ்ச்சிறார்களின் தாய்மொழி வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து வருகின்றது என்பது உங்கள் யாபேருக்கும் தெரிந்த விடையமாகும். அந்தவகையில் மண் சஞ்சிகையில் சிறுவர்பகுதியை அலங்கரித்துக் கொண்டிருக்கின்ற சிறார்களும் போட்டிகளில் கலந்துகொண்ட சிறுவர்களின் படைப்புக்களின் தொகுப்பே இந்தச் சிறுவர் சிறப்புமலராக உங்கள் கரங்களில் தவழுகிறது...

இன்றைய விஞ்ஞான கணனி உலகில் வாசிப்புப் பழக்கம் என்பது சகல தரப்பினரிடையேயும் அருகிவருவது வேதனைக்குரிய விடையமாகும். காலச்சூழல் விஞ்ஞான வளர்ச்சியின் பயன்பாடு ஒருபுறம் தாய்மொழியை இழக்கும் வருங்காலச் சந்ததிகள் ஒருபுறமாக நாம் நோக்கவேண்டும். நாம் எங்கு?..எவ்வளவு காலம் வாழ்ந்தோம்?..என்பதல்ல முக்கியம்…நாம் எப்படி வாழ்ந்தோம் என்பதே முக்கியம். நம் தாய்மொழிக்கு..நம் தாய் நாட்டிற்கு…நம்சமூகத்துக்கு..மனிதசமுதாயத்துக்கு.. என்ன செய்ய வேண்டும் எப்படிச் செய்யவேண்டும், எப்பொழுது செய்யவேண்டும் என்பதைப் பாடமாகக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு எங்கள் சந்ததிகள் உருவாக்கப்பட வேண்டும்..அந்த வகையில் மண் சஞ்சிகையும் மனித சமூகத்துக்கானபல பணிகளைச் செய்து வருகின்றது... எனவே நம் சிறார்கள்,மாணவர்கள், இளையோர் ஏன் பெரியவர்கள் யாவரும் வாசிப்புப் பழக்கத்தை இடைவிடாமல் தொடருங்கள். தேடலோடு கூடிய வாசிப்பு,எழுத்து,பேச்சுப் பழக்கங்களை கூட்டுதல் வேண்டும். நவ நாகரீக கணனி, சினிமா, சின்னத்திரை மோகங்களைக் குறைத்து அறிவில் முன்னேற்றம் சார்ந்த விடையங்களில் உங்கள் குழந்தைச் செல்வங்களையும் ஈடுபடுத்துங்கள்..வருங்காலத்தில் நல்ல பிரஜைகளாக அவர்கள் உருவாக வழி காட்டுங்கள். மேலாக நல்ல மனிதர்களாக வாழக் கடமைகளைச் செய்யுங்கள்..நாமும் உங்களோடு கரம் பற்றி ஆக்கபூர்வமான பணிகளை எதிர்காலத்தில் செய்வோம். உங்கள் பிள்ளைகளைத் தொடர்ச்சியாக மண் சஞ்சிகையுடன் இணைத்துக் கொள்ளுங்கள்! பயனடையுங்கள்!..

**-ஆசிரியர்-**

## அழித்திடுவோம்!..

பாரதி வழியில் வாழ்ந்திடுவோம்
பகல் வேடக்காரரை வீழ்த்திடுவோம்
வஞ்சம் பொறாமை சூதுகளை
வாழ்வினில் நாமும் விலக்கிடுவோம்
அச்சம் மடமைகளைப் போக்கிடுவோம்
அழியாத் தமிழினைத் காத்திடுவோம்
நச்சுப் போன்ற கூட்டத்தை
நசுக்கி நாமும் அழித்திடுவோம்!...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூரியனும் சூழவுள்ள கோள்களும்...

வானம் என்பது பெரிய வெளி. அதிலே சூரிய குடும்பம் அல்லது ஞாயிற்றுத் தொகுதி எனப்படும் ஒரு தொகுதியும் உண்டு. இக் குடும்பத்துக்குச் சூரியனே தலைவன். சூரியனைச் சுற்றி ஒன்பது கோள்கள் இருக்கின்றன. அவையாவன செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி, பூமி, நெப்டியூன், புளுட்டோ, யுரேனஸ் என்பவையாகும். இவைகளில் மிகச்சிய கோள் புதன். மிகப்பெரிய கோள் வியாழன். சனியைச் சுற்றி ஒரு வளையம் காணப்படுகிறது. சிவப்பு நிறக் கோள் வெள்ளி எனப்படும் சுக்கிரன். இந்த ஒன்பது கோள்களிலும் உயிர்கள் வாழக்கூடிய சூழல் புவியிலேயே இருக்கின்றது. ஏனைய கோள்களில் உயிர் வாழ்வதற்குரிய சூழல் உண்டா என விஞ்ஞானிகள் ஆராய்ந்து வருகிறார்கள்..

எல்லாக் கோள்களும் உருண்டை வடிவானவை. சூரியனிடமிருந்தே ஒளியைப் பெறுகின்றன. இவை பம்பரம் சுழல்வதைப் போல தானே சுழன்று அத்துடன் சூரியனையும் சுற்றி வருகின்றன. இதனால் இரவு பகல் உண்டாகின்றன. பூமி தன்னைத்தானே சுற்றிவர 24 மணி நேரமும் சூரியனைச் சுற்ற 365 நாட்களும் செல்கின்றன. இக்காலத்தை ஒரு வருடம் என்கிறோம். சில

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோள்களுக்குத் துணைக் கோள்களும் இருக்கின்றன. உதாரணமாக பூமியின் துணைக்கோள் சந்திரனாகும். இதுவும் தான் சூரியனிடமிருந்து பெறும் ஒளியைப் பூமிக்குத் தருகிறது. பூமி சூரியனைச் சுற்றிவரும் பாதையைப் புவி ஒழுக்கு என்கிறோம். இதைக்கண்டு பிடித்தவர் கோப்பனிக்கவர் என்னும் விஞ்ஞானியாவர். இக்கோள்களின் இடப்பெயர்வைக் கொண்டே சோதிடங்கள் கணிக்கப்படுகின்றன..

செல்வி.வி.ஜெனனி.
ஜேர்மனி

## பாரினில் வாழ்வாய்...!



மானைப் போல ஓடு
மயிலைப் போல ஆடு
யானை போல அசைவாய்
ஆடுபோல மேய்வாய்
முயலைப் போலத் தாவு
முத்துக் கிளிபோல் பேசு
வயலின் மீனாய் துள்ளு
மாங்குயிலாகப் பாடு
பசுவைப் போல பண்பாய்
பாரினில் என்றும் வாழ்வாய்!...


செல்வி.நிலானி.மணிவண்ணன்.
01-06-2001 Berlin.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒன்றும்.. ஒன்றும்..

ஒன்றும் ஒன்றும் இரண்டு
ஒன்றாய்க் கூடி வாழு
இரண்டும் இரண்டும் நாலு
இனிய மொழி பேசு
மூன்றும் மூன்றும் ஆறு
முன்னேற்றப் பாதையைப் பாரு
நான்கும் நான்கும் எட்டு
நல்ல செய்தி சொல்லு
ஐந்தும் ஐந்தும் பத்து
வந்து என்னுடன் ஆடு!...

செல்வி. ஜதுசினி கிரிதரன்.
10.08.2003
Dortmund



## வாத்து:

குள்ளக் குள்ள வாத்து
குவா..குவா வாத்து
மெல்ல உடலைச் சாய்த்து
மேலும் கீழும் பார்த்து
குள்ளக் குள்ள வாத்து!...

ரிஷி-சாந்தலிங்கம்.
06-12-2003 Switzerland

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஔவைப்பாட்டி



ஔவை எங்கள் பாட்டி
அழகுத் தமிழ்ப் பாட்டி
பாலர் நாங்கள் நாள்
எல்லாம் பண்போடு வாழவே
சால அறம் சொன்னவர்
தமிழின் வடிவம் ஆனவர்
ஆத்திசூடி தந்தவர்
அருமையான பாட்டியார்
ஏற்றி..ஏற்றிப் போற்றுவோம்
இன்ப வாழ்வு வாழுவோம்!...

செல்வன். சரன் ரவிச்சந்திரன்.
13-07-2001. Berlin

## வாய்பற்றி வாயே பேசுகிறது..!

நான் வாயினால் கதைப்பேன்.
ஒரு நாளைக்கு இரண்டு தடவை
பல்லுத் தீட்டுவேன்.
கனக்க இனிப்பு சாப்பிடக்கூடாது
குளிர்பானம் அடிக்கடி குடிக்கக் கூடாது.

ஜதீசன் சிவபாலன்
வயது: 07
நெதர்லாந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணனியும் இணையமும்:

இன்று எமது வாழ்வில் கணனி மிகவும் பயனுள்ள கருவியாக அமைந்துவிட்டது. இன்றைய விஞ்ஞான வளர்ச்சியில் கணனியானது ஒரு மிகஅரிய கண்டுபிடிப்பென்பது மிகையில்லை. அதில் ஒரு முக்கிய பகுதிதான் இணையமாகும். கணனிகள் எமக்குப் பலவழிகளில் உதவுகின்றன. அவை காரியாலயங்களிலும் அலுவலகங்களிலும் ஏன் எமது வீடுகளிலும் கூட இன்று பயன்படுத்தப்படுகின்றன. கணனியின் பயன்பாடுகளில் மிகச்சிறப்பு இணையம் மூலம் நாங்கள் பல தகவல்களைப் பெற்றுக்கொள்ளுவதுதான். உதாரணத்துக்கு நாம் செய்திகள் பாடங்கள் விளையாட்டுக்கள் மற்றும் பலவற்றைக் குறிப்பிடலாம். இணையத்தின் மூலம் நாங்கள் உலகத்தின் பல பகுதிகளிலிருக்கின்ற எமது நண்பர்களுக்கும்மற்றும் அலுவலகங்கள் நிறுவனங்களுக்கும் மின்அஞ்சலை மிகச்சொற்ப கணங்களில் அனுப்பமுடியும். எமக்குத் தேவையான தகவல்களையும் பாடல்களையும் படங்களையும் கணனியின் மூலம் இறுவட்டுகளில் பதிவுசெய்து பார்த்தும் கேட்டும் மகிழலாம். தொலைக்காட்சி போன்றதுதான் கணனித்திரை. சுட்டியானது கணனித்திரையில் எமக்குத் தேவையான பகுதிகளைத் தெரிவுசெய்வதற்கு பயன்படுத்தப்படுகின்றது. இன்று எம் அனைவருக்கும் கணனியானது அத்தியாவசியானகருவியாக அமைந்துவிட்டது. அதனால்தான் கணனியைப் பற்றிய கல்வியறிவினை சிறுவயதிலிருந்தே பாடசாலைகளில் கற்பிக்கின்றனர். கணனியைத் தீயவழிகளில்பயன்படுத்தாது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவனமெடுத்துக் கொண்டால் எதிர்காலத்தில் எம்மையும் நாம் வாழும் இவ்வுலகையும் மிக இலகுவாக இணைப்பதற்கு அது உதவும் என்பதில் சந்தேகமில்லை.



செல்வன்:
பானுஸ்கந்தா.புவனேந்திரன்

Duisburg

## பொன் மொழிகள்:

கல்வி என்பது வாழ்க்கைக்காக சீவியத்திற்காக அல்ல. இடையறாத தேடல் பயிற்சி மூலம் துன்பங்களை நாம் வெல்ல முடியும்.
தன்னை அடக்கிப் பழகிக் கொண்டவர் வேறு எதற்கும் வசப்படமாட்டார்.
உண்மை எங்கே இழுத்துச் சென்றாலும் அதைப் பின் பற்றிச் செல்லவேண்டும்.
யாருடைய நெஞ்சு ஏழை மக்களுக்காகத் துயரத்தில் அழுகிறதோ அவரே மகாத்மா.
அதிகமான படிப்பு மட்டும் உண்மையான மனிதர்களை உண்டாக்கி விடமுடியாது.
துன்பம் விளைவிப்பதற்கு அறியாமையைத் தவிர வேறு எதுவும் காரணமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பலகருத்துக்களைத் தரும் ஒருசொல்:

அகம்:- இடம் , மனம் , வீடு
மெய்:- உண்மை , உடல் , மெய்யெழுத்து
திங்கள்:- சந்திரன் , கிழமை , மாதம்
பதி:- அரசன் , இறைவன் , கணவன்
மதி:- புத்தி , சந்திரன் , மதித்தல்

## புத்தகங்கள்.

அச்சுப் பதித்து உருவாகும்
அனைத்து மொழியிலும் பதிவாகும்
எழுத்துப் படிக்க உதவும்
எழுத்துக்களால் பதிப்பு பெறும்
பள்ளி சென்று படிக்கின்ற
மாணவர்களின் நல்ல தோழன்
அறிவு நாம் பெருக்கிடவும்
அனைத்தும்கற்று உயர்ந்திடவும்
புத்தகங்கள்தான் உதவும்
புதுப்புது கருத்தை அறியத்தரும்
நல்ல நல்ல நூல்களே
நமக்கு என்றும் தோழர்கள்.
தேடிப்பெறுவோம் புத்தகம்
படித்து மகிழ்வோம்



குணாளன் இராஜேந்திரன் ( 13 )
பிரான்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நண்பர்கள்.

நல்ல நல்ல நண்பர்கள்
நாம் விருப்பும் நண்பர்கள்
விளையாடி மகிழ்வோம்
பள்ளியிலும் பழகுவோம்
எம் நண்பர்களை அறிவோம்
இன்பம் துன்பம் இரண்டிலும்
உதவி செய்யும் நண்பர்கள்
நாமும் உதவி நட்பை
நல்ல நட்பாய் மதிப்போம்
நட்பு எதிலும் நன்மையே
நாங்கள் நல்ல நண்பரே..!



இராஜேந்திரன் சரண்யா ( 10 )
பிரான்ஸ்

### ஓர் எழுத்துச் சொற்கள்:

| | | | | |
|---|---|---|---|---|
| பூ | தை | மா | பை | ஆ(பசு) |
| கா | தா | வா | போ | பா |
| சா | நீ | நோ | தீ | கோ(அரசன்) |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வயதில்!..

இந்திய சரித்திரத்தில் இடம்பெற்ற போது பகவத் சிங் **வயது** 23.
மோகலாயச் சக்கரவர்த்தி அக்பர் அரியணை ஏறிய போது **வயது** 13.
பன்னிரண்டாம் சார்லஸ் சுவீடன் அரியணையில் அமரும் போது அவருக்கு **வயது** 19.
ஜோர்ஜ் வாஷிங்டன் ஆங்கிலேயர்களுக்கு எதிராக அமெரிக்கச் சுதந்திப் போரை நடத்திய போது **வயது** 19.
கலிலியோ தேர்மா மீட்டரைக் கண்டுபிடித்தபோது **வயது** 20.
மார்க்கோப்போலோ உலகப் பயணத்தைத் தொடங்கிய போது **வயது** 17.
பாஸ்கல் கணக்கிடும் கருவியைக் கண்டுபிடித்தபோது **வயது** 19.
நேப்போலியன் பீரங்கிப் படையில் அதிகாரியாக நியமிக்கப்பட்ட போது **வயது** 16.
உலகப்புகழ் பெற்ற எழுத்தாளர் விக்டர் ஹியூகோ அவர்களின் முதல் புத்தகம் வெளிவந்த போது **வயது** 15.
இரவீந்திரநாத் தாகூர் ஷேக்ஸ்பியரின் நாடகத்தை வங்க மொழியில் மொழி பெயர்த்த போது **வயது** 14.

மண் 20


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வண்ணக் கோழிக்குஞ்சு!..

பட்டுப் பட்டுக் குஞ்சு
பஞ்சு மேனிக் குஞ்சு
சிட்டுப் போன்ற குஞ்சு
சின்னக் கோழிக் குஞ்சு
சின்னச் சின்ன அரிசி
தின்னத் தின்னத் தருவேன்
என்னைத் தேடி வா..வா!...

செல்வி.சூமியா.முரளிதரன்.

28-04-2001
Essen



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னையின் அன்பு!..

என்னைப் பெற்ற நல்லதாயே
எங்கே அன்பு கற்றாயே
எந்தன் கண்ணே என்பாயே
எனக்குத் தந்தே உண்பாயே!..

கண்டால் முத்தம் தருவாயே
கட்டி அணைத்துக் களிப்பாயே
ஆடை அணிகள் தருவாயே
அழகு பார்த்துச் சிரிப்பாயே!..


தேன் தமிழை அள்ளித்தருவதையே
தெவிட்டாது முத்தம் தருவாயே
தெய்வம் என்று துதிப்பேனே
தினமும் பாதம் பணிவேனே!..

செல்வி.ஆரபி.பத்மநாதன்.

18-05-2002.
Haltern am See.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை!

இலங்கை நாடு எம் நாடு
இனிய எங்கள் தாய் நாடு
அழகு மலைகள் நிறை நாடு
ஆறுகள் பாய்வது எம்நாடு
மழை வளம் உள்ளது எம் நாடு
மண் வளம் உள்ளது எம் நாடு
நெல்லோடு தேயிலை தென்னை பனை
நிலையாய் ஓங்கும் எம் நாடு
பல இன மக்கள் நண்பர்களாய்
பழகியே வாழ்வது எம் நாடு!...

செல்வன்.விதுஷன் கிரிதரன்.

11-08-2001
Dortmund.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஆடும் மயில்!...

ஆடும் மயிலே!..ஆடும் மயிலே!..
ஆடல் எங்கே கற்றாய் நீ?..
பாடும் குயிலின் பாட்டுக்குப்
பாவம் எங்கே கற்றாய் நீ!...

நீலப் புள்ளிப் பசுந்தோகை
நீட்டிச் சுழன்று ஆடுகின்றாய்
கோல மயிலே உன்னோடு
ஆட நானும் வரலாமா!...

செல்வன்.நிதுர்சன்.சிறிகந்தராசா.

14-06-2002 – Duisburg




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துகிறேன் வாழியவே.!

உன்னால் பலமொட்டுக்கள் மலர-அவை
பூவாகி நம்மொழி வாசம்பரவ
எழுத்தில் பதிந்த வகுப்பறையாய்
புலம்பெயர் நாட்டில் மலர்ந்திட்டாய்

உதவிகேட்ட கரங்கட்கு
கரம் நீ நீட்டினாய்
தாகம் கொண்ட நாவிற்கு
நீரதை நீ வழங்கிட்டாய்
தமிழ்மேல் கொண்ட பற்றை நீ
தர்மமாயே காட்டிட்டாய்

உன்சேவையை பாரட்டி
தழிழ்த்தாயவள் வணங்கிடுவாழ்
இருமாத இதழே நீ
எந்நாளும் மலர்ந்திடணும்
என்றென்றும் உன் சேவை
தொடர்ந்திடணும்
உலகில் பெரும்இடத்தைப்
பெற்றிடணும்
மனதார வாழ்த்துகிறேன்
உன் சேவையை பெற்றவன் நான்



செல்வன்.ராம் பரமானந்தன்
Kevelaer

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்லப் பிராணிகள்!..


சின்னக் கோழிக் குஞ்சுகள்
தீனி போடத் தாயுடன்
என்னை நோக்கி வந்துமே
இரையைக் கையில் தேடுமே!...

பாலைக் குடிக்கக் கன்றுமே
பசுவைத் தேடி ஓடுமே
வாலைக் கிளப்பித் துள்ளுமே
வந்து என்னைத் தள்ளுமே!..

பூனை கண்ணை மூடிக்கொண்டு
பாலைக் குடிக்கப் பார்க்குமே
நான் எழுந்து நடக்கவே
நடுவிற் கண்ணைத் திறக்குமே!...

செல்வி.கிலவுஸ்சியா.சந்திரகுமார்.

10-10-2001
Essen.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்மா!..

என் உயிரையும் உடலையும் தந்தவர் என்
அம்மா.என்னை வளர்க்க உறங்காமல் உடன்
நின்றவர் அம்மா.

என் பசியை ஆற்றி தடுமாறி விழுந்த
போது கலங்காமல் துணை நின்றவர் என் அம்மா.
அணையாத கலங்கரை விளக்காய் நின்று
என்னைக் கரைசேர்த்துக் காப்பவர் என் அம்மா.
என் அம்மா உயிர் வாழும் தெய்வம்.

நான் வாழ ஒளியாக அருள் தருபவள் என்
அம்மா.
என் அம்மா ஓர் நடமாடும் தேவதை.
எந்தன் வாழ்க்கையில் வந்த வானவில் என்
அம்மா.

என் அம்மாவை நான் என்றும் போற்றி
வணங்குவேன்.
தாய் சொல்லைத தட்டாதே என்பதற்கிணங்க
நான் என் அம்மாவின்
அறிவுரைகளைக் கடைப்பிடிப்பேன்.

செல்வன்.டிலக்சன் தர்மசீலன்.

17-09-2001
Essen.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாவரும் ஒன்றே!..


வெள்ளை நிறத்தொரு பூனை -எங்கள்
வீட்டில் வளருது கண்டீர்
பிள்ளைகள் பெற்றதப் பூனை -அவை
பேருக் கொரு நிறம் ஆகும்!...

சாம்பல் நிறமொரு குட்டி -கருஞ்
சாந்து நிறமொரு குட்டி
பாம்பு நிறமொரு குட்டி -வெள்ளைப்
பாலின் நிறமொரு குட்டி!...

எந்த நிறமிருந்தாலும் -அவை
யாவும் ஒரேதர மன்றோ
இந்த நிறம்சிறி தென்றும் -இஃது
ஏற்ற மென்றும் சொல்ல லாமோ?...

செல்வன்.தர்சிகன்.தவகுமார்.

Gelsenkirchen.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலா!..

அழகு நிலா வா..வா..
அழகு நிலா வா..வா..
பழகு நிலா வா..வா..
பளிங்கு நிலா வா..வா..
இருள் அகல வா..வா..
ஒளி நிலவாய் வா..வா..
வெண்ணிலவே வா..வா..
தண்ணிலவே வா..வா..
கையினிலே வா..வா..
களித்திடவே வா..வா..

செல்வன்.வனோஸ்.வசீகரன்.

29-10-2003.
Essen



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சரியாய் நில்!..

என்னதான் உன்னால் முடியாது?
எழுந்து நில்!..துணிந்து செல்!..
எதிர்பைக்கண்டு நீ அஞ்சாதே!..
எழுந்து நில்!..தொடர்ந்து செல்!..

சாதிக்க முடியும் உன்னாலே
தானே நில்!..தடையைத் தள்!..
சரித்திரம் ஆகணும் உனது செயல்
சரியாய் நில்!..தாவிச் செல்!..

செல்வி.ஆரணி.வரதராஜா.

17-04-2002
Meschede.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்றாய் வாழ்வோம்!..

கூட்டமாக வாழ்வோமே
குருவிகளை பார்த்தே நாம்..
கூட்டமாக வாழ்ந்தாலே
கூண்டில் அடைக்க முடியாதே!..
வீட்டில் நாம் ஒற்றுமையாய்
வீரமாய் இருப்போம்!..
குருவியைப் போல் வாழ்ந்தாலே
நம் குலம் என்றும் அழியாதே!..
நாட்டிலும் வீட்டிலும் நாம்
கூடி ஒன்றாய் வாழ்வோமே!..

செல்வி.கோ. நிருஜா

15-05-2001
Soest



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நாய்க்குட்டி!

தோ..தோ..நாய்க்குட்டி
துள்ளி வா நாய்க்குட்டி
வெள்ளை நிற நாய்க்குட்டி
வீரமான நாய்க்குட்டி
வாலை..வாலை ஆட்டும்
பாலை நன்றாய்க் குடிக்கும்
திருடன் வந்தால் குரைக்கும்
லொள்...லொள் நாய்க்குட்டி!...

செல்வி.லிசானா.பிரபாகரன்.

22-07-2003.
Netherland

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை

இலங்கை நாடு எம் நாடு
இனிய எங்கள் தாய் நாடு
அழகு மலைகள் நிறை நாடு
ஆறுகள் பாய்வது எம் நாடு
மழை வளம் உள்ளது எம் நாடு
மண் வளம் உள்ளது எம் நாடு
நெல்லோடு தேயிலை தென்னை
பனை நிலையாய் ஓங்கும் எம் நாடு
பல இன மக்கள் நண்பர்களாய்
பழகியே வாழ்வது எம் நாடு!..

செல்வி.பிருத்திகா.சிவஞானம்.

11-03-2001
Essen.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மரம் வளர்ப்போம்!..

மரமே மரமே பூ தருவாய்
பூவே பூவே காய் தருவாய்
காயே காயே கனி தருவாய்
விதையே விதையே செடி தருவாய்
செடியே செடியே மரம் தருவாய்
மரமே மரமே மழை தருவாய்
மரத்தை வளர்த்தே வளம் பெறுவோம்!...

செல்வி.இந்துஜா.இளங்குமார்.
8 வயது.

Mesechede.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தம்பி!..

எந்தன் தம்பி சின்னத் தம்பி
என்னுடைய ஆசைத் தம்பி
கொஞ்சும் தமிழ் பேசும் தம்பி
கொஞ்சி விளையாடு தம்பி
கறுப்புச் சட்டை போடும் தம்பி
காலையில் எழுந்து அழும் தம்பி
கண்டதை எல்லாம் கடிக்கும் தம்பி
கடிந்து பேச கதறும் தம்பி
ஆசை மிகுந்த என் தம்பி
அழகு கொண்ட என் தம்பி!..

செல்வன்.நிர்மலன்.நகுலேந்திரன்.
26-01-2001
Soest



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிங்கம்!..

அங்கம் சிலிர்த்துப் பொங்கும்
அடர்ந்த காட்டில் வாழும்
தங்க வெயிலில் நாக்கால்
தாடியைத் தடவும் சிங்கம்
ஆளைக் கண்டால் பாயும்
ஆத்திரக்காரச் சிங்கம்
கர்ச்சனை உள்ள சிங்கம்
சத்தம் போட்டு விட்டால்
சகல உயிர்களும் ஓடும்
குத்திக் குதறிப் போடும்!...

செல்வி.ஹெறிணி.சிவராஜ்.

06-08-2001 Berlin



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைகளை வளர்ப்போம்...!

இன்றைய நாட்களில் எம் கலைகளைப் பேணிப் பாதுகாக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. காரணம்: புலம்பெயர்ந்த நாடுகளில் எமது தாய்மொழிடன் கலைகளும் கலாச்சாரமும் மெல்ல மெல்ல அழிந்து வருகின்றது. நாங்கள் எங்கள் தாய்நாட்டை விட்டு புலம் பெயர்ந்தாலும் நாம் எம் மொழியுடன் கலைகளையும் மறந்துவிடாது அவற்றை மேலும் கற்று வளர்ப்பதற்கு முயற்சிக்கவேண்டும்.

புலம்பெயர்ந்த மக்களில் ஒருசிலர் மொழியையும் கலாச்சாரத்தையும் வளர்ப்பதற்குப் பாடுபட்டாலும் பலரோ தாய் மொழியை மறந்து மேலைத்தேசத்து கலாச்சாரத்தில் விரும்பி வாழ்கின்றனர். இது மிகவும் வேதனையைத் தருகின்ற விடயமாகும்.

எமது வாழ்வில் எம் தாய் எவ்வளவு முக்கியமோ அதுபோலத்தான் எம் தமிழ் மொழியுமாகும். எமது மொழியும் கலாச்சாரமும் இணைந்துள்ளது போலவே எம் கலைகளும் பண்பாடும் எம்மோடு இணைந்துள்ளன. கலைகளில் இயல் இசை நாடகம் என்பன எம் தமிழ் மொழியில் மிகவும் சிறப்பானவையாகும். இசைத் தமிழில் கர்நாடக இசை கிராமிய இசை மேலைத்தேய இசை போலவே இயல் தமிழில் பரதம் குச்சுப்பிடி கதகளி கிராமியநடனம் என்று பலபகுதிகளுண்டு. அவ்வாறே பல கூறுகளால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடகத்தமிழையும் நாம் காணக்கூடியதாக உள்ளபோதும் எம் உணர்வுகளோடு எம்கலைகள் கலந்திருந்தால்தான் அவை சிறப்பாக அமையும்.

எம் மூததையர் நமக்கு விட்டுச்சென்ற சொத்துக்களான கலை கலாச்சாரத்தை நாம் கட்டிக்காக்கவேண்டியது எம் அனைவரதும் கடமையாகும். சிறுவர்களாகிய நாம் எம் மொழியுடன் நம் கலைகளையும் கற்று பேணிப் பாதுகாப்பதற்கு முன்வரவேண்டும். அவற்றை நாம் அழியவிடாது பாதுகாத்தலே இனி எம் பணியாகும்.

இந்த அரும்பணியில் மண் சஞ்சிகையானது சிறப்பாக ஈடுபட்டுவருவது எம் எல்லோருக்கும் மகிழ்ச்சியான விடயமாகும். நாம் தமிழ் மொழியைக் கற்பதற்கும் கலைகளைப் பயில்வதற்கும் ஆசியர்கள்போல் பணியாற்றி வருவதனை நாம் காண்கிறோம்.

20வருட காலமாக எம்மொழிக்கும் கலை கலாச்சார வளர்ச்சிக்குமாக உழைத்துவருகின்ற மண் சஞ்சிகையை உங்களோடு சேர்ந்து நானும் மனமார வாழ்த்துகிறேன்.



செல்வி
பானுரதி-புவனேந்திரன்

Duisburg.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முத்தம் தா!..

கண்ணே மணியே முத்தம் தா
கட்டிக் கரும்பே முத்தம் தா
வண்ணக் கிளியே முத்தம் தா
வாசக் கொழுந்தே முத்தம் தா
தேனே பாலே முத்தம் தா
தெவிட்டாத கனியே முத்தம் தா
மானே மயிலே முத்தம் தா
மடியில் வந்து முத்தம் தா
கண்ணே கனியே முத்தம் தா
கட்டிக் கரும்பே முத்தம் தா

செல்வி.தூரிகா.குணலிங்கம்.

Berlin.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னை பூமியைக் காப்போம்..!

நாம் வாழும் அன்னை பூமியைப் பாதுகாப்போம்
நம் வருங்கால சந்ததியினரும் மகிழ்வுடன் வாழ
வழிவகுப்போம்
அதற்கு இயற்கையைப் பேணவேண்டியது
அவசியம்
கரியமில வாயுவின் அடர்த்தியினால் ஓசோன்
படலத்தில் ஓட்டை ஏற்பட்டுவிட்டது.
இதனால் புவியின் வெப்பநிலை உயர்ந்து
வருகிறது:
கரியமிலவாயுவை பிராணவாயுவாக மாற்றும்
வல்லமை வாய்ந்தவை மரங்கள்.
எனவே மரஞ்செடி கொடிகளை வளர்ப்போம்
சுற்றுச்சூழலைப் பாதுகாப்போம்
நில நடுக்கம் சுனாமி என இயற்கை சீற்றம்
அடைந்ததால்
கெய்ட்டியைப் போல அழிவுகளே ஏற்படும்.
எனவே இயற்கையைப் பேணி இன்பமாய்
வாழ்வோம்.

வாகீசன் ஆரணி (24. 01. 1996)

Swiss



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வேசம் போட்ட காகம்

ஒரு நாள் ஒரு காகம் இரைதேடிப் பறந்து திரிந்தது ஓரிடத்தில் மயில்கள் கூட்டமாக நிற்பதைக் கண்டது. மயில்களை அன்றுதான் முதன் முதலாகக்கண்டது. மயில்களின் அழகையும் அவற்றின் பளபளப்பான இறகையும் கண்டு ஆச்சரியப்பட்டது. அடடா எனக்கு இப்படியான இறகில்லையே என்று கவலைப்பட்டது.

அதன் கவலைக்கு சிறு மருந்து கிடைத்ததுபோல ஆங்காங்கே சில மயில்களின் இறகுகள் விழுந்து கிடந்தன.அவற்றைப் பொறுக்கி எடுத்துத் தனது இறகுடன் செருகிக் கொண்டது. மயில் இறகைச் செருகிக் கொண்டதும் அதற்குத் தானும் மயில்தானே என்ற எண்ணம் வந்துவிட்டது.

தனது கூட்டுக்குப் பறந்து சென்றது. அங்கே மற்றைய காகங்கள் இதைக் கண்டு அங்கே வந்தன. ஆச்சரியமாகப் பார்த்தன. என் அருகே வராதீர்கள் என்று இந்தக் காகம் சத்தம் போட்டது. நான் இன்று முதல் கன்னங்கரிக் காகமல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று முதல் நான் அழகான மயிலாகிவிட்டேன் என்று பெருமைபேசியது. இதைக் கேட்டதும் மற்றைய காகங்கள் சிரித்தன. அப்படியா நல்லது இனி எங்கே இருக்கப்போகிறாய்..? என்று கேட்டன. இனிமேல் நான் இங்கு உங்களுடன் இருக்கமாட்டேன். மயில்களுடன் தான் இருக்கப்போகிறேன் என்று சொல்லிக்கொண்டு பறந்துபோனது. மயில்களின் கூட்டுக்கு நேரே சென்றது. மயில்களுக்கு இதைக்கண்டதும் பரிதாபமாக இருந்தது. எங்களுடைய ஆண்கள்தான் எங்கேயோ போய்ச் சண்டைபிடித்து விட்டு மூன்று இறகுடன் திரும்பிவந்துள்ளார். என்று அவரை நன்றாக உபசரித்தன. மயில்களின் அகவலுக்கு காகத்தின் காகா கரைதல் வேறாக இருந்தது. இதனுடைய சத்தம் வேறாக இருப்பதால் அதனை மயில்கள் கொத்தித் துரத்தின. கொத்தும்போது செருகிக்கொண்ட இறகுகளும் கீழே விழுந்தன. வந்திருப்பவர் காகம் என்பது தெளிவாகத் தெரிய மயில்கள் துரத்தித் துரத்திக் கொத்திக் கலைத்தன. தனது இனத்துடன் போய்சேரமுடியாது வெட்கத்துடன் எங்கே செல்வேன்..? என்று காகம் யோசித்து அழுதுகொண்டிருந்தது.



அபிராமி பரமானந்தன்
வயது :08

Kevelaer (Germany)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

„மண்" சஞ்சிகையின் 20வது ஆண்டுநிறைவுவிழா சிறுவர் சிறப்புமலருக்கு என் வாழ்த்துக்கள்

மண் சஞ்சிகை வளர்ந்து வரும் மாணவ மணிகளின் அறிவை வளர்க்கும் ஆசானாக விளங்குகின்றது. பிள்ளைகளான எங்களுக்கு நல்வழிகாட்டி, இரண்டாவது தாயாய்த் திகழ்கின்றது. எமது கருத்தைச் சொல்ல கேட்க விரும்பும் நண்பனாய் இருக்கின்றது.

ஆசான், தாய், நண்பன்- இம்மூவரும் ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் முக்கிய இடத்தைப் பெறுகின்றார்கள். ஆகவே மண்சஞ்சிகையும் எமது மனதில் முக்கிய இடத்தைப் பெற்று, அழியாப் புகழுடன் இருபது ஆண்டுகளிலும் வெளிவந்த இதழ்களைப் போன்று எதிர்காலத்திலும் நற்பணியாற்ற வாழ்த்துகின்றேன்!



சுபாங்கி ரவீந்திரநாதன்

Münster

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை

இளமைக்குச் சிறந்தது படிப்பு
கல்வியின் மேன்மை சிறப்பு
பதவியில் உயர்வது வாய்ப்பு
ஆசானுக்குக் கொடுப்பது மதிப்பு
இன்பத்தில் வருவது சிரிப்பு
பகையில் வருவது வெறுப்பு
சோம்பலாய் இருப்பது இழப்பு
கடினமாய்த் தேவை உழைப்பு
உள்ளத்தில் தூய்மை வனப்பு
துன்பத்தில் தேவை சகிப்பு
பயத்தால் உண்டாகும் திகைப்பு
தற்பெருமை கொள்வது தடிப்பு
சிறந்த வெகுமதி மன்னிப்பு
கண்ணியமாய் வாழ்வது பொறுப்பு
கருத்துடன் வாழ்வது விழிப்பு



சுபைதா ரவீந்திரநாதன்
Münster

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம் கடமை

காலையில் எழுவோம்
கடமைகள் முடிப்போம்
திருநீறு அணிவோம்
சிவன் கழல் தொழுவோம்.
சுத்தம் காப்போம்
சோம்பலைத் தவிர்ப்போம்
பள்ளிக்குப் செல்வோம்
பாடங்கள் கற்போம்
குரு சொல் கேட்போம்
குணமாய் நடப்போம்
தந்தை தாய் பணிவோம்
தருமம் செய்வோம்
அன்பை வளர்ப்போம்
பண்பைப் பேணுவோம்
நல்லவை செய்வோம்
நாட்டுக்கு உழைப்போம்.

நிதுர்சன் - சிறிஸ்கந்தராசா ( 14.06.2002 )

47054 Duisburg



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலர்கள்

தமிழ் அன்னையின் கண்மணி -நான்
மலர் பேசுகிறேன்...
கரங்கள் பல கொண்டு மலர்ந்த மண்ணால்
இருபது ஆண்டுகள் மலர்ந்த
மலர்கள் கொண்டு பூங்கா ஒன்று
அமைக்கின்றேன். வண்ணமாக
வாருங்கள் உள்ளே நந்தவனத்துள்
வண்ணமாய் வரைந்த
கவிதையாய் கட்டுரையாய்
சிறுகதையாய் பாவாய்
மழலை மலர்களுமாய்
தருகிறேன் நான்.
நுழைவாயினுள் நுழைந்து
நகர்ந்து பாடுங்கள்.
புலமை பெறுவீர் கலை பயில்
தெளிவும் பெறுவீர்.
கட்டுரை வன்மையும் அடைவீர்
வாருங்கள் எம் மண்ணில்
மணம்பெறுவீர்..! வழம் பெறுவீர்..!!



மயூரனி சண்முகரத்தினம் ( 30.7.1995 )


47652 Weeze

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## யானை:

யானை ஒரு பெரிய மிருகம்
அது ஒரு காட்டு மிருகம்
அது ஒரு பலமான மிருகம்
யானைக்குத் தும்பிக்கை உண்டு
யானைத் தந்தத்தின் நிறம் வெள்ளை
யானையை நாங்கள் மிருகக்
காட்சிசாலையில் பார்க்கலாம்.
யானை கரும்பை விரும்பை உண்ணும்.

எனது பெயர்: சாயித்தன்
எனது அப்பாவின் பெயர்: சோதீஸ்வரன்
எனக்கு வயது: 08 ( பிரித்தானியா )
நான் தமிழில் வளர்நிலை ஒன்றில் படிக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பழங்கள்.



பழங்கள் என்றால் எனக்கு மகிழ்ச்சிதான் நாம் எல்லோரும் பழங்களை விரும்பி உண்ணுகின்றோம். பழங்களில் நிறைய சத்துக்கள் உள்ளன. பழங்கள் எமது உடல் வளர்ச்சிக்கு மிகவும் முக்கியமான ஒன்றாகும். பழங்கள் பொதுவாக நறுமணம் கொண்டவை. பழங்கள் மிகவும் இனிமையானவை. நாம் மா பலா வாழை போன்ற பழங்களை பழமரங்களில் இருந்தும் கொடித்தோடை வெள்ளரி போன்ற சிலவற்றை கொடிகளிலிருந்தும் பெறுகின்றோம். பழங்களில் பலவகைகள் உள்ளன.

மாம்பழம் வாழைப்பழம் பாலாப்பழம் என்பவற்றை முக்கனிகள் என்று அழைப்பர். வாழைப்பழம் சீப்புச்சீப்பாக இருக்கும். பலாப்பழம் சுளை சுளையாக இருக்கும் மாதுளம் பழத்தினுள் விதைகள் முத்து முத்தாக இருக்கும். திராட்சைப் பழம் குலை குலையாய்த் தொங்கும். பழங்களில் இருந்து பழப்பாகு பழரசம் பழக்கலவை போன்றவற்றையும் தயாரிக்கலாம். நாம் பழங்களை உள்நாட்டில் உற்பத்தி செய்வதுடன் வெளிநாடுகளில் இருந்தும் இறக்குமதி செய்கின்றோம்.

சி.சியாமளா
ஆண்டு 03

எசன் தமிழ்ப் பாடசாலை
45329 Essen

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது பெயர்: தர்சனா
எனது அப்பாவின் பெயர்: சோதீஸ்வரன்
எனக்கு வயது: 12 ( பிரித்தானியா )
நான் தமிழில் வளர்நிலை மூன்றில் படிக்கிறேன்.



நீரின் பயன்கள்:

நீர் குடிப்பதற்குப் பயன்படுகிறது.
உணவு சமைக்கப் பயன்படுகிறது.
குளிக்கவும் ஆடைகளைச் சுத்தம் செய்யவும்
வேறு தேவைகளுக்கும் உதவுகின்றது.
பிராணிகளுக்கும் தாவரங்களுக்கும்
நீர் வேண்டும். நீரைக் கொதிக்கவைத்தால்
ஆவியாக மாறும். நீராவியின் சக்தியால்
இயந்திரங்கள் இயக்கப்படுகின்றன.

முன்பு , ஓடும் நீரினால் சக்கரங்களைச் சுழல
வைத்தனர். அதனால் இயந்திரங்களை
இயக்கினர். நீர் வீழ்ச்சியின் உதவியால்
மின்சாரம் உண்டாக்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடிச் சேருங்கள்!..

பாலர்களே பாலர்களே
பாடிச் சேருங்கள்
பறவைகள் போல் கூடி என்றும்
பாடிச் சேருங்கள்!...

காலையிலும் மாலையிலும்
பாடிச் சேருங்கள்
கனிவு தரும் இனிய தமிழ்
பாடிச் சேருங்கள்!...

சோலையிலே பூவினம் போல்
சுற்றி ஆடுங்கள்
சுந்தரப் புன்முறுவலுடன்
சுற்றி ஆடுங்கள்!...



பால் நிலவில் பாலர்களே
பாடிச் சேருங்கள்
பாலர்களே பைந்தமிழ்ப்பா
பாடிச் சேருங்கள்!...

செல்வி.அஜானா.அருள்வடிவேல்

23-09-2000
Duisburg.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆமைப்பிள்ளை

ஆமைப்பிள்ளை வருகிறார்
ஆற்றங்கரையிலே
ஆடி அசைந்து வருகிறார்
ஆற்று மணலிலே
ஆசை கொண்டு தடவுறேன்
அவரின் முதுகிலே
ஆகா தலையை மறைப்பதேன்
அவர் தம் ஓட்டுள்ளே!...

செல்வி.ஆரணி.அருள்வடிவேல்.

04-08-2002
Duisburg.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்னை!..

ஈரைந்து மாதம் கருவிலே தாங்கி
ஈன்றெடுத்த அன்னை கரத்திலே ஏந்தி
மூன்றெழுத்து வார்த்தை முதல் எழுத்தாக்கி
முத்தான முத்தம் கன்னத்தில் சிந்தி
சொத்தாக்கிப் போனார் எந்தன் அன்னை!...

நித்தம் கண்ணில் என்னை வைத்து
சுற்றம் சூழ உறவை அமைத்து
கற்றுத் தந்த அழகிய தமிழால்
கருணை தெய்வம் அவரே என்று
கரங்கள் இரண்டால் கட்டி அணைத்தேன்!..

செல்வன்.ராம்ஜித் ராகவன்.
8 வயது.

Switzerland.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மொழி!..

அன்னை மொழியாம் தமிழ் மொழியை
அனைவரும் படிக்க வேண்டு மென்பேன்

எந்த நாட்டில் வாழ்ந்தாலும்
எங்கள் மொழியே தமிழ் மொழியாம்

பிறமொழிகளை நாம் பயின்றிடுவோம்
பிறப்பு மொழியை மறவாமல்

அன்புக் குழந்தைகள் அனைவருக்கும்
அன்னை மொழியை ஊட்டுங்கள்

சிறப்பு நிறைந்த மொழி எங்கள்
செந்தமிழ் என்பதை உணர்ந்திடுங்கள்!...

செல்வி.பார்கவி செல்வேந்திரன்.

14-01-2002.
Olsberg.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்மா!..

அம்மா..அம்மா..அம்மா
அன்பு மிக்க அம்மா
அன்போடு என்னை அணைத்து
அறிவு தரும் அம்மா
பாலும் சோறும் தந்து
பாட்டும் சொல்லிதருவார்
பாசம் மிக்க அம்மா!..

செல்வி.பவுத்திரா.பிரபாகரன்.

14-04-2003
Essen.



## ஆண் பெண் இருபாலருக்கும் பொதுவான சொற்கள்...

| | | | |
|---|---|---|---|
| அகதி | ஏழை | வைத்தியர் | அறிவாளி |
| நீதிபதி | நோயாளி | மேதை | எதிரி |
| புத்திசாலி | அறிவிலி | வழக்காளி | தொழிலாளி |
| அமைச்சர் | சாரதி | கணக்காளர் | தொண்டர். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பனின் திறமை.

அன்பன் என்ற சிறுவனுக்கு புத்தகம் வாசிப்பதென்றால் பிடிக்கும். அவன் அதிகநேரம் புத்தகம் வாசிப்பான். அவனின் தாய் ' நீ கொஞ்சநேரம் வெளியில் சென்று விளையாடு' என்று சொல்வார்கள் அவன் பந்தை எடுத்துக்கொண்டு வெளியில் சென்றான். அன்பன் நடந்துகொண்டிருக்கும்போது பின்னால் காலடிஓசை கேட்டது. அவன் திரும்பிப் பார்த்தான். பின்னால் 6 பேர் அன்பனைநோக்கி ஓடிவந்தார்கள். அன்பன் பயந்து வேகமாக ஓடினான். பாழடைந்த வீட்டுக்குள் போய் ஒளிந்தான். அந்தக் கட்டிடத்தில் யாரும் இல்லை: அமைதியாக இருந்தது. அன்பன் நினைத்தான் இங்கே வந்து புத்தகம் வாசிக்கமுடியும் என்று. அடுத்த நாள் அவன் ஒரு புத்தகத்தை எடுத்து மறைத்துக்கொண்டு போனான். இதை அவனுடைய அம்மா பார்த்தார்: ஆனால் எதுவும் பேசவில்லை. பாழடைந்த வீட்டிலிருந்து அவன் புத்தகத்தை வாசித்தான். வாசித்துக்கொண்டிருக்கும்போது சத்தம் கேட்டது. அவன் சத்தம் வந்த இடத்துக்குச் சென்றான். அங்கே நான்கு சிறுவர்கள் களவு எடுப்பதற்குத் திட்டம் போட்டுக்கொண்டிருந்தார்கள். இவன் மெதுவாக நடந்து வெளியே வந்து காவல் துறையிடம் தெரிவித்தான். காவல் துறையினர் அவர்களைக் கைதுசெய்ததுடன் சிறுவர்களின் பெற்றோருக்கே தண்டனைகிடைத்தது: அன்பனுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிசும் பாராட்டும் கிடைத்தது. இப்போது அவன் எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் புத்தகம் வாசிக்கலாம்.

வாகீசன் சிவபாலசிங்கம்

Netherland



## சிறிது!..பெரிது!..

ஆலம் விதையோ சிறியது
அது முளைக்கும் மரமோ பெரியது
குறளின் அளவோ சிறிது
அது கொடுக்கும் அறிவோ பெரிது
கண்கள் இரண்டும் சிறியவை
காணும் காட்சிகள் பெரியவை
கைகள் இரண்டும் சிறியவை
செய்யும் செயல்கள் பெரியவை
கணனியின் அளவோ சிறியது
நாம் பெறும் அறிவோ பெரியது!...

செல்வன்.றிசிசன் தர்மசூரியன்.

26-04-2002
Berlin.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "மண்" சஞ்சிகையின் 20வது ஆண்டு நிறைவு போட்டி முடிவுகள் - 2010

மண் சஞ்சிகையின் 20வது ஆண்டு நிறைவையொட்டி சிறார்கள், மாணவர்கள், வாசகர்களிடையே நடாத்தப்பட்ட போட்டிகளில் பரிசு பெறுபவர்களின் விபரம்...

**A. பிரிவு 6 வயதுவரை:-**

ஓவியப் போட்டி:

1வது பரிசு -செல்வி.பூவிகா.எடிசன். Meerbusch
2வது பரிசு - நிவேதன்.சண்முகரத்தினம். Weeze
3வது பரிசு -செல்வி.மதுரா.இளங்குமரன்.Meschede
(கலந்துகொண்ட போட்டியாளர்கள் தொகை - 36)

**B. 7 - 9 வயதுப்பிரிவு:-**

ஓவியப் போட்டி:

1வது பரிசு -செல்வன்.டிலக்ஸன்.தர்மசீலன்.Münster
2வது பரிசு -செல்வன்.விதுஷன்.கிரிதரன்.Dortmund
3வது பரிசு -செல்வி.ஆரணி.வரதராசா.Meschede
(கலந்துகொண்ட போட்டியாளர்கள் - 68 )

உறுப்பெழுத்துப் போட்டி:

1வது பரிசு- செல்வி.பார்கவி.செல்வேந்திரன்.Olsberg
2வது பரிசு- செல்வன்.நிதுர்சன்.சிறிகந்தராசா.Duisburg
3வது பரிசு- செல்வி.ஆரபி.பத்மநாதன்.Haltern
(கலந்துகொண்ட போட்டியாளர்கள் - 26 )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**C. 10 – 12 வயதுப்பிரிவு:-**

ஓவியப் போட்டி:

1வது பரிசு- செல்வன்.தருசன்.உதயகுமார்.Soest

2வது பரிசு- செல்வி.ஆகிரா.முருகதாஸ்.Bochum

3வது பரிசு- செல்வி.சாகித்யா.சண்முகரட்ணம்.Weeze.

(கலந்துகொண்ட போட்டியாளர்கள் - 54 )

உறுப்பெழுத்துப் போட்டி:

1வது பரிசு- செல்வி.யசீனா.கணேசலிங்கம்.Wickede(Ruhr)

2வது பரிசு- செல்வன்.வாகீஸ்.வசீகரன்.Essen

3வது பரிசு- செல்வி.சௌமியா.குலேந்திரன்.Karlsruhe.

(கலந்துகொண்ட போட்டியாளர்கள் - 34)

**D. 13 – 15 வயதுப்பரிவு:-**

ஓவியப் போட்டி:

1வது பரிசு - செல்வன்.டொசாந்த்.அன்ரனிதாஸ்.Soest

2வது பரிசு - செல்வி.சுபைதா.ரவீந்திரநாதன்.Münster

3வதுபரிசு- செல்வி.யமீனா.கணேசலிங்கம்.Wickede(Ruhr)

(கலந்துகொண்ட போட்டியாளர்கள் - 32 )

கட்டுரைப் போட்டி:

1வது பரிசு - செல்வி.தர்சனா.உதயகுமார்.Soest

2வது பரிசு - செல்வி.சுபைதா.ரவீந்திரநாதன்.Münster

3வது பரிசு - செல்வன்.கஜீவ்.விக்னேஸ்வரன்.Essen.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

<u>கவிதைப் போட்டி:-</u>

1வது பரிசு - செல்வி.சுபைதா.ரவீந்திரநாதன்.Münster
2வது பரிசு - செல்வி.விதுசா.ஜெகதீசன்.Geilenkirchen
3வது பரிசு - செல்வி.மயூரணி.சண்முகரட்ணம்.Weeze.
(கலந்துகொண்ட போட்டியாளர்கள் - 12 )

**E. 16-18 வயதுப்பிரிவு:-**

<u>ஓவியப் போட்டி</u>

1வது பரிசு - செல்வி.சுபாங்கி.ரவீந்திரநாதன்.Münster
2வது பரிசு - செல்வி.பானுரதி.புவனேந்திரன்.Duisburg
3வது பரிசு - செல்வி.சுதர்மிலா.சுகுமார்.Duisburg

<u>கட்டுரைப் போட்டி:-</u>

1வது பரிசு - செல்வி.நிவேதா.சண்முகலிங்கம்.Soest
2வது பரிசு - செல்வி.பானுரதி.புவனேந்திரன்.Duisburg
3வது பரிசு - செல்வி.சுகந்தினி.அருட்செல்வம்.Soest

<u>கவிதைப் போட்டி:-</u>

1வது பரிசு - செல்வி.சுபாங்கி.ரவீந்திரநாதன்.Münster
2வது பரிசு - செல்வி.வேதிகா.ஜெகதீசன்.Geilenkirchen
3வது பரிசு - செல்வி.கலையதர்சினி.கலையரசன்.Swiss

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்குறளின் சிறப்பு:

இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பு மனிதனால் மனிதனுக்கு சொல்லப்பட்ட நூல் தோன்றியது. இந்நூல் ஒவ்வொரு மனித வாழ்வின் முக்கிய அங்கங்களாகிய அறம், பொருள், இன்பம் ஆகியவற்றைப் பற்றி விளக்குகின்றது. இதனை இயற்றியவர் பெரும் புலவராகிய திருவள்ளுவர் ஆவர். இவரால் இந்நூலுக்கு வழங்கப்பட்ட பெயர் திருக்குறள். கடுகு சிறிது காரம் பெரிது என்பதுபோல இரண்டு வரிகளில் வாழ்வின் அனைத்துப் பகுதிகளுக்கும் எக்காலத்துக்கும் பொருந்தும் குறள்களை திருவள்ளுவர் பாடியிருப்பது அதிசயம். இதனால் தமிழில் உள்ள நூல்களிலேயே சிறப்பிடம் பெற்ற நூல் திருக்குறள். இதுவே நமக்குக்கிடைத்த வாழ்வியல் நூல் ஆகும். நாயனார் கற்பியலுக்கு மிகச்சிறந்த இலக்கணமாக விளங்கினார். வள்ளுவர் தாம் எழுதிய பொய்யா மொழி நூலை தமிழ்ச் சங்கத்தில் அரங்கேற்றம் செய்ய மிகவும் சிரமப்பட்டார். இந்நிலையில் ஔவையார் துணைநின்று திருக்குறளை அரங்கேற்ற உதவினார். கடவுள் வாழ்த்துமுதல் ஊடல் உவகைவரை நூற்று முப்பத்து மூன்று அதிகாரங்களை திருவள்ளுவர் பாடியுள்ளார். இவ்வதிகாரங்கள் அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால், என்று மூன்று பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு அதிகாரத்திலும் பத்து குறள்கள் உள்ளன. ஆகவேஆயிரத்து முன்னூற்று முப்பது குறள்கள் திருக்குறளில் அடங்கியுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்து பாடல்களுமே குறள்வெண்பா என்னும் வெண்பா வகையைச் சேர்ந்தவை.குறள் வெண்பாக்களால் பாடப்பட்ட முதல் நூலும் இதுதான். செந்நாப்புலவர் தனது முதலாவதுகுறளை "அகர முதல எழுத்தெல்லாம்" என தமிழின் உயிரெழுத்துக்களில் முதலாவது எழுத்தான 'அ' வில் தொடங்கியுள்ளார். தனது இறுதி குறளில் "கூட்டி மயங்கப்பெறின்"என மெய் எழுத்துக்களில் இறுதி எழுத்தான 'ன்' இல் முடித்துள்ளார். முப்பால் என்பது மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இது நமது தமிழ் வரலாற்றுக்கு பெருமையை சேர்க்கின்றது. இவ்வுலகம் அழிந்து போனால் உலகின் அதிமுக்கிய மொழிகளி லிருந்து சிறந்த நூல்கள் அமெரிக்க வெள்ளை மாளிகையில் பாதுகாப்பாக வைக்கப்கட்டுள்ளன. அவ்வரிசையில் இந்தியா திருக்குறளை ஒப்படைத்தது. இதுவே திருக்குறளின் முக்கியத் துவத்தை உணர்த்துகின்றது.

திருக்குறள் படிப்பதற்கு எளிதானது. உணர்வதற்கு அரிதானது என்பது கற்றறிந்தோர் வாக்கு.பல தலைமுறைகளைக் கடந்தும் இன்றும் அதன் பொருள் நமது வாழ்க்கைக்கு உதவுகிறது என்பதே திருவள்ளுவரை ஆச்சரியத்துடன் பார்க்க வைக்கிறது.தமிழ் புலவர்களில் அதிகமானோர் திருவள்ளுவர் இயற்றிய திருக்குறளின் கருத்துக்களை தமது கவிதைகளில் சேர்த்து அழகுக்கு அழகு சேர்த்துள்ளனர். "கடுகைத் துளைத்து ஏழ் கடலைப் புகுத்தி குறுகத் தறித்த குறள்" என்று இடைக்காடர் புகழ்ந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஔவையார் அதற்கு ஒருபடி மேலே போய் “அணுவைத் துளைத்து ஏழ் கடலைப் புகட்டிக் குறுகத் தறித்த குறள்” என்று பாடினார். “வள்ளுவர் செய்த திருக்குறளை மறவற நன்குணர்ந்தோர்கள் உள்ளுவரோ மநுவாதி,ஒரு குலத்துக்கு ஒரு நீதி என்று முப்பாலை சிறப்பிக்கிறது மனோன்மணியம். இவ்வாறான சிறப்புகளை உடைய திருக்குறளை அறிதல் வேண்டும். இதனை அறிந்து அதன்படி நடந்தால் பெரும் வாழ்வை பெறலாம். “கற்க கசடற கற்றவை கற்றபின் நிற்க
அதற்கு தக.”



நிவேதா. சண்முகலிங்கம்
24.03.1992

மண் சஞ்சிகையின் 20வது ஆண்டு நிறைவையொட்டி 16-18 வயதுப் பிரிவு மாணவர்களிடையே நடாத்தப்பட்ட கட்டுரைப்போட்டியில் 1வது பரிசு பெற்றது.

## பதினாறு பேறுகள் (செல்வங்கள்)

| | | | |
|---|---|---|---|
| புகழ் | கல்வி | ஆற்றல் | வெற்றி |
| நன்மக்கள் | பொன் | நெல் | அறிவு |
| பெருமை | ஆயுள் | நல்லூழ் | இளமை |
| துணிவு | நோயின்மை | நுகர்ச்சி | பொருள். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண் சஞ்சிகையின் 20வது ஆண்டு நிறைவையொட்டி 13-15 வயது மாணவர்களிடையே நடாத்தப்பட்ட கவிதைப் போட்டியில் **1வது பரிசு பெற்ற கவிதை.**

## பொறுமை:

சிறந்த உயர்ச்சி கொடுக்கும்
சீரிய பண்பாம் பொறுமை
பொறுமை என்றும் பேணில்
பெருமை உண்டாம் வாழ்வில்!...

வெற்றிக்கு வழி சமைத்த பொறுமை
வந்ததாம் பஞ்சபாண்டவர் வாழ்வில்
தோல்வியில் துன்புற்ற துரியோதனன்
தோற்றமையும் பொறுமை இல்லாமையே!...

பொறுமை என்னும் பொக்கிஷத்தை
பேணிக் காப்பது நம் கடமை
சமூக வாழ்வில் உயர்வடைய
சந்தோஷம் கொடுக்கும் பொறுமையன்றோ!...

பொறுமைப் பண்பினை வாழ்வில்
பொன் போன்று மதிப்பிட வேண்டுமன்றோ
சீராகப் பொறுமை நிலைக்குமெனில்
சிறப்படையும் நல் வாழ்வு திண்ணமன்றோ!...

செல்வி.சுபைதா.ரவீந்திரநாதன்.
Münster-Germany.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண் சஞ்சிகையின் 20வது ஆண்டு நிறைவையொட்டி 16-18 வயது மாணவர்களிடையே நடாத்தப்பட்ட கவிதைப் போட்டியில் **1வது பரிசு பெற்ற கவிதை.**

## சமத்துவம்

ஆணோ பெண்ணோ
வெள்ளையோ கறுப்போ
இளையவரோ முதியவரோ
பேதையோ மேதையோ
தாயோ சேயோ
ஆசானோ மாணவரோ
ஓவ்வொருவர் இதயத்திலும்
ஓற்றுமை இருக்கிறதே
கனவிலே!...

சுயசிந்தையைத் தவிர
பிறர் நலம் கருத
வாய்ப்பளிப்பதில்லையே
எம் மனம்!...

சிறப்பும் செழிப்பும்
அண்மையில் கண்டிட
தனிவழியாய் விளங்கிடும்
அன்பு என்னும் அத்திவாரம்!...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகல இனங்களுக்கும்
சமூக சந்தோசமாம்
கனவு நனவாக
காலம் வருவது எப்போ!...

செல்வி.சுபாங்கி.ரவீந்திரநாதன்.
Münster-Germany.

## வேண்டும்!..

மனதில் உறுதி வேண்டும்
வாக்கினிலே இனிமை வேண்டும்
நினைவு நல்லது வேண்டும்
நெருங்கின பொருள் கைப்பட வேண்டும்!...


கனவு மெய்ப்பட வேண்டும்
கைவசமாவது விரைவில் வேண்டும்
தனமும் இன்பமும் வேண்டும்
தரணியிலே பெருமை வேண்டும்!...

கண் திறந்திடல் வேண்டும்
காரியத்தில் உறுதி வேண்டும்
மண் பயனுற வேண்டும்
வானகம் இங்கு தென்பட வேண்டும்!...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆத்திசூடி


01-அறம் செய்ய விரும்பு.
02-ஆறுவது சினம்.
03-இயல்வது கரவேல்.
04-ஈவது விலக்கேல்.
05-உடையது விளம்பேல்.
06-ஊக்கமது கைவிடேல்.
07-எண் எழுத்து இகழேல்.
08-ஏற்பது இகழ்ச்சி.
09-ஐயம் இட்டு உண்.
10-ஒப்பரவு ஒழுகு.
11-ஓதுவது ஒழியேல்.
12-ஔவியம் பேசேல்.



## புதிய ஆத்திசூடி

01-அச்சம் தவிர்.
02-ஆண்மை தவறேல்.
03-இளைத்தல் இகழ்ச்சி.
04-ஈகை திறன்.
05-உடலினை உறுதி செய்.
06-ஊண் மிக விரும்பு.
07-எண்ணுவது உயர்வு.
08-ஏறுபோல் நட.
09-ஐம்பொறி ஆட்சி கொள்.
10-ஒற்றுமை வலிமையாம்.
11-ஓய்தல் ஒழி.
12-ஔடதம் குறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


20 வது ஆண்டை நிறைவு செய்யும்
மண் சஞ்சிகைக்கு
எமது வாழ்த்துக்கள்
சாருகா, சாருஜன்

Bäckerei - Konditorei - Stehcafé
Mülder
Seit 1928
Qualität aus Meisterhand

Inh.S.Balamohan Betriebswirt d.H & Bäckermeister
Heidemannstr 83, 50825 Köln, Tel:0221 554977

**Bäckerei Mülder**
**Heidemannstr.83**
**50825 Köln**
**Germany**

**Mr. S. Balamohan**
**Tel.: 0049 221 554977**

T.J.B.Brothers
T.J.B
Brothers
Tel: 02433-90 32 82-Fax: 02433-90 32 81
தரமான பொருட்கள் மனநிறைவாகக் கிடைக்கும்!
உங்கள் இல்லத தேவைகளுக்கு
வேண்டிய, மளிகைப்பொருட்கள்
பசுமையான மரக்கறி வகைகள்,
கடலுணவுப் பொருட்கள், மற்றும் உங்கள்
அனைத்து அத்தியாவசியத்
தேவைகளையும் ஒரே இடத்தில்
பெற்றுக் கொள்ள நாடுங்கள்
Graf Beust Str.10 - 41836 Hückelhoven

**T.J.B. Brothers**
**Graf Beust Str.10**
**41836 Hückelhoven**
**Germany**

**Mr. R. Ragunathan**
**Tel.: 0049 2433 903282**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ERDE

20 Jahre Mann-Erde
Jubiläumsausgabe

Germany | 17.04.2010




# சிறுவர் சிறப்பு மலர்

17.04.2010

Skantha

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org